இராமநாதபுரம், வேளாண்மை இணை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணைகள்
பிறப்பிப்பவர் : திருமதி பே.இந்திராகாந்தி, பி.எஸ்சி.,(விவ)

பநி3/12334/2017 நாள் :28 .04.2018

பொருள் : பணிக்குழு - தமிழ்நாடு அமைச்சுப்பணி - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி-4ல் 2015-2016-ம் ஆண்டில் தட்டச்சர் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டு இம்மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு நியமன ஆணை வழங்கப்பட்டது - தட்டச்சர் பதவியில் பணிவரன் முறைப்படுத்தி ஆணை வழங்குதல்.

பார்வை :
1. செயலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-6 க.எண்.5843/PSD-A2/2017, நாள்: 05.10.2017
2. சென்னை, வேளாண்மை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணைகள் எண்.அநிபி3/97065/2017, நாள் : 20.10.2017
3. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண். பநி3/12334/2017, நாள் : 06.11.2017
4. சென்னை, வேளாண்மை இயக்குநர் க.எண். MES3/159754/2017-1, நாள் : 30.01.2018

-----

ஆணை:

பார்வை 1-ல் கண்ட அரசு கடிதத்தில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தினால் 2015-2016-ஆம் ஆண்டில் தொகுதி 4-ன் மூலம் தற்காலிகமாகத் தேர்ந்து எடுக்கப்பட்டு (Selected Provisionally) வேளாண்மைத் துறைக்கு தட்டச்சர் பதவியில் பணியாளர்கள் ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டதைத் தொடர்ந்து, பார்வை 2-ல் கண்ட செயல்முறை ஆணைகளின்படி திருமதி எஸ்.சத்யா, தட்டச்சர் அவர்களுக்கு இராமநாதபுரம் மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டது.

இந்த ஒதுக்கீடு ஆணையைத் தொடர்ந்து திருமதி எஸ்.சத்யா, தட்டச்சர் அவர்களுக்கு 19500-62000 என்ற ஊதிய விகிதத்தில் பார்வை 3-ல் கண்ட செயல்முறை ஆணைகளின்படி வேளாண்மை உதவி இயக்குநர், கடலாடி அலுவலகத்தில் தட்டச்சர் பதவியில் பணிநியமனம் செய்து ஆணையிடப்பட்டது.

பார்வை 4-ல் கண்ட கடிதத்தில், பணியில் சேர்ந்துள்ள பணியாளர்களை அவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் கணக்கில் கொண்டு பணியாளர்களது பணியினை வரன்முறை செய்து கொள்ள உத்தரவு வழங்கிடக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இதன்படி திருமதி எஸ்.சத்யா அவர்கள் தட்டச்சர்-ஆகப் பணியில் சேர்ந்த நாளான 09.11.2017 மு.ப. முதல் கீழ்க்கண்ட விவரப்படி பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

## தட்டச்சர் பதவியில் பணிவரன்முறை

| வ. எண் | பெயர் | பிறந்த தேதி | தமிழ்நாடு அமைச்சு பணியாளர் தேர்வாணைய வரிசை எண் / பதிவு எண் | தட்டச்சர்-ஆகப் பணியில் சேர்ந்த நாள் | பணிவரன் முறை செய்யப்படும் நாள் | பணிபுரியும் அலுவலகம். |
|---|---|---|---|---|---|---|
| 1. | திருமதி எஸ்.சத்யா | 22.03.1984 | 26<br>160538027 | 09.11.2017 மு.ப. | 09.11.2017 மு.ப. | வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம், கடலாடி |

இவர் பணி வரன்முறை செய்யப்படுவதால், வருடாந்திர ஊதிய உயர்வு மற்றும் சம்பள நிலுவைத் தொகை ஏதுமிருப்பின் விதிகளின்படி அவற்றைப் பெறத் தகுதியுடையவராகிறார். திருமதி எஸ்.சத்யா, தட்டச்சர் தமது பணியில் முறைப்படியாக நியமிக்கப்பட்ட நாளிலிருந்து இரண்டு ஆண்டுகள் தகுதிகாண் பருவத்தினை, தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்குள்ளாக (Two years duty within a continuous period of Three years) முடித்தல் வேண்டும்.

"இந்தப் பணிவரன்முறையானது, சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் நிலுவையிலுள்ள 2015-2016 நடைபெற்ற தொகுதி - IV தேர்வுகள் குறித்த ரிட் மனுக்களின் மீதான இறுதி ஆணைக்குக் கட்டுப்பட்டதாகும்."

27/4/18

வேளாண்மை இணை இயக்குநர்
இராமநாதபுரம்.

பெறுநர்

திருமதி எஸ்.சத்யா, தட்டச்சர்,
வேளாண்மை உதவி இயக்குநர், கடலாடி - மூலமாக

27.4.18

நகல் : வேளாண்மை உதவி இயக்குநர், கடலாடி.

நகல் : வேளாண்மை இயக்குநர், சென்னை அவர்களுக்குத் தகவலுக்காகப் பணிந்தனுப்பப்படுகிறது.

நகல் : பநி-3 இருப்புக் கோப்பிற்கு.

10/10/23

ASSISTANT EXECUTIVE ENGINEER
AGRI-ENGINEERING DEPARTMENT
RAMANATHAPURAM